


## தனித்தனியாக வந்தாலும் – கூட்டாக வந்தாலும் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் ஒன்றுதான் என்பதை மக்கள் அறிவார்கள்! பா.ஜ.க.வோடு சேர்ந்து

# தமிழ்நாட்டுக்குச் செய்த பழனிசாமியின் துரோகப் பட்டியல் நீளமானது!

## திருவண்ணாமலை பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் விளாசல்!

**திருவண்ணாமலை, ஏப்.10 –**

**திராவிட மாடல் அரசின் சாதனைப் பட்டியலை விட பா.ஜ.க.வோடு சேர்ந்து தமிழ்நாட்டுக்குச் செய்த பழனிசாமியின் துரோகப் பட்டியல்நீளமானது எனவும், அ.தி.மு.க.வும் - பா.ஜ.க.வும் தனித்தனியாக வந்தாலும் கூட்டணியாக வந்தாலும் வேறு வேறு இல்லையென்று தமிழ்நாட்டு மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்றும் திருவண்ணாமலை பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08-04-2026)மாலை, திருவண்ணாமலையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

நினைத்தாலே முக்தி தரும் ஊராக, ஆன்மிக அன்பர்களால் போற்றப்படும் ஊர், திருவண்ணாமலை!

அப்படிப்பட்ட திருவண்ணாமலைக்கு, கிரிவலம் செல்பவர்கள் ரெகுலராக வருகிறார்களோ, இல்லையோ... இந்த ஸ்டாலின் அடிக்கடி திருவண்ணாமலையை வலம் வருகிறேன்.

அரசு நலத்திட்ட நிகழ்ச்சிகள், வேளாண் கண்காட்சி, பாக முகவர்கள் மாநாடு, தலைவர் கலைஞர் சிலைத் திறப்பு, இளைஞரணியின் பிரம்மாண்டமான மாநாடு என்று எதாவது ஒரு வகையில், உங்களை நான் சந்தித்துக் கொண்டே இருக்கிறேன்.

**திருவண்ணாமலை என்றாலே தி.மு.க.வின் மலை!**

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இந்தத் திருவண்ணாமலையையும் – தீபத்தையும் பிரிக்க முடியுமா? முடியாது. அதே போன்று, என்னையும் – திருவண்ணாமலையையும் பிரிக்கவே முடியாது. என்றும் உங்களில் ஒருவன், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

1957-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு மாநாடு ஆகட்டும்; 1967 ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுத்த, 1963 திருவண்ணாமலை நாடாளுமன்ற இடைத்தேர்தல் வெற்றி ஆகட்டும்! 2021 ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்த, 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' தொடக்கம் ஆகட்டும்! திருவண்ணாமலை என்றாலே "தி.மு.க. மலை!" என்ற அளவுக்கு, கழகம் தொடங்கிய காலத்திலிருந்து இப்போது வரை, திருவண்ணாமலை தி.மு.க.வின் கோட்டை.

திருவண்ணாமலையை தலைவர் கலைஞர் அவர்கள்தான் தனி மாவட்டமாக உருவாக்கினார். இப்போது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், திருவண்ணாமலையை மாநகராட்சியாக தரம் உயர்த்தி இருக்கிறோம்.

இப்படி, உரிமையோடும் – உணர்வோடும் – உறவோடும், உங்களிடம் ஆதரவு கேட்டு வந்திருக்கிறேன்.

மலைகளும் – அருவிகளும் நிறைந்த மாவட்டம், கள்ளக்குறிச்சி! திருவண்ணாமலையும், கள்ளக்குறிச்சியும் திராவிட மாடல் 2.0.க்கு ரெடியா?

இப்போது இந்த இரண்டு மாவட்ட வெற்றி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தப் போகிறேன்.

**எ.வ.வேலு – கு.பிச்சாண்டி உள்ளிட்ட நமது வெற்றி வேட்பாளர்கள்!**

முதலில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் எ.வ. வேலு அவர்கள். எதிலும் வல்லவர், எப்போதும் வல்லவர்! அவருக்கு அறிமுகம் தேவையா? அவரின் ஆற்றலுக்கு சான்றாகத் தான் – சென்னையில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை, மெரினாவில் கலைஞர் உலகம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், திருவாரூரில் கலைஞர் கோட்டம், கன்னியாகுமரியில் கண்ணாடிப் பாலம்! அப்படிப்பட்ட வேலுவுக்கு, திருவண்ணாமலை தொகுதியில் மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, கீழ்ப்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கு.பிச்சாண்டி. இளைஞரணியில் என்னுடன் பயணித்தவர் பிச்சாண்டி. திருவண்ணாமலை நகர்மன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர், சட்டமன்ற துணைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, செங்கம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மு.பெ. கிரி. மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராக இருந்து, இரண்டு முறை செங்கம் தொகுதியில் வெற்றி பெறும் அளவுக்கு, மக்கள் செல்வாக்கைப் பெற்றவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை நீங்கள் அளிக்க வேண்டும்.

அடுத்து, செய்யாறு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஒ. ஜோதி. செய்யாறு ஒன்றியத் தலைவராக இருந்து மக்கள் பணியாற்றத் தொடங்கி, எம்.எல்.ஏ. ஆனவர். செய்யாறு சிப்காட் விரிவாக்கம், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், பேருந்து நிலையம் சீரமைப்பு ஆகியவற்றை தொகுதிக்கு கொண்டு வந்திருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, வந்தவாசி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அம்பேத்குமார் அவர்கள். இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து மக்கள் பணியாற்றிய அம்பேத்குமார், மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். வந்தவாசி, திண்டிவனம், செய்யாறு, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களை இணைக்கும் இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டத்தை கொண்டு வந்தது இவரது சாதனை. அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை நீங்கள் வழங்க வேண்டும்.

அடுத்து, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் பெ.சு.தி. சரவணன். கழகத்தின் மூத்த முன்னோடி பெ.சு. திருவேங்கடத்தின் அருமை மகன். இரண்டு முறை பெரிய கிளம்பாடி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து, பல்வேறு பணிகளை ஆற்றியிருக்கிறார். கடந்த முறை வெற்றி பெற வைத்தது போன்றே, உதயசூரியன் சின்னத்தில் அவருக்கு வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, போளூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த சரவணன். வழக்கறிஞரான சரவணன், நம்முடைய பெருமதிப்பிற்குரிய அருமைச் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, போளூர் தொகுதியில் போட்டியிடுகிறார். அவருக்கு, முரசு சின்னத்தில் வாக்குகளை நீங்கள் வழங்க வேண்டும்.

அடுத்து, ஆரணி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மகாலட்சுமி கோவர்த்தனன். கண்ணமங்கலம் பேரூராட்சித் தலைவரான இவர், பேரூராட்சி முழுவதும் புதிய சிமெண்ட் சாலை, குடிநீர் பைப் லைன், நூலகம் ஆகியவற்றை அமைத்து மக்கள் பணி ஆற்றியிருக்கிறார். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை அளிக்க வேண்டும்.

**அடுத்து, கள்ளக்குறிச்சி மாவட்டம்!**

ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் வசந்தம் கார்த்திகேயன். தியாகதுருகம் ஒன்றியச் செயலாளராக இருந்து, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளராக உயர்ந்திருக்கிறார் வசந்தம் கார்த்திகேயன். ஏழை எளியவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கியதற்காக மக்கள் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றிருப்பவர். கடந்த முறை போன்றே, ரிஷிவந்தியம் மக்கள் அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் உதயசூரியன். எட்டாவது முறையாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். ஐந்து முறை வெற்றி பெற்றிருக்கிறார். இதில் இருந்தே உதயசூரியனின் செல்வாக்கை நீங்கள் புரிந்து கொள்ளலாம். உதயசூரியனுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை நீங்கள் வழங்கிட வேண்டும்.

அடுத்து, உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஜி.ஆர். வசந்தவேல். பி.இ. பட்டதாரியான இவர், விவசாயம் செய்கிறார். மாவட்டக் கவுன்சிலர், ஒன்றியக் குழுத் தலைவர், ஒன்றியக் கவுன்சிலர் ஆகிய பொறுப்புகளை வகித்து மக்கள் தொண்டாற்றியவர். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த கு. மாலதி. என்னுடைய இனிய நண்பர் எழுச்சித் தமிழர் இனிய சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களின் சகோதரி மகள். வழக்கறிஞரான இவருக்கு 'பானை' சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

**நிறைவேற்றிய திட்டங்களைச் சொல்லி உரிமையோடு வாக்குக் கேட்கிறேன்!**

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களான இவர்கள் அனைவருக்கும் அவரவர் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று உங்களில் ஒருவனாக கேட்டுக் கொள்கிறேன். வெற்றி உறுதிதா? உறுதி (மக்கள்). நன்றி! சீட்டு இப்போது உறுதியாகிவிட்டது. அதனால், வேட்பாளர்கள் உட்காரலாம்!

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்



**தமிழுக்கு பட்டாணி அளவுக்கு கூட நிதி ஒதுக்குவது இல்லை!**

**இந்திக்கும் – சமஸ்கிருத வளர்ச்சிக்கும் பா.ஜ.க. அரசு பூசணிக்காய் அளவுக்கு நிதி ஒதுக்குகிறார்கள். ஆனால், தமிழுக்கு பட்டாணி அளவுக்கு கூட ஒதுக்குவது இல்லை. இந்தத் துரோகத்தை எதிர்த்து பழனிசாமி பேசவே மாட்டார். அவருக்கு சுயமரியாதையும் கிடையாது; தமிழுணர்வும் கிடையாது. கீழடி அறிக்கையை ஏன் வெளியிடாமல் இருக்கிறீர்கள்? என்று நாம் எத்தனை முறை பா.ஜ.க. அரசை பார்த்து கேட்கிறோம். பழனிசாமி ஒப்புக்காவது இதைப் பற்றி பேசி பார்த்திருக்கிறீர்களா?**